இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 15 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆவணி 08 – சனிக்கிழமை 24 ஆகஸ்டு 2024 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 15 : Thiruvalluvar Year - 2055 - Aavani 08 - Saturday 24 August 2024 - Madurai 12 Pages ₹ 5.00

## உரிமைத் தொகை ஏதுமின்றி - கடிதங்கள், கதைகள், கவிதைகள், நாடகங்கள், திரைப்பட வசனங்கள் என

# கலைஞர் நூல்கள் அனைத்தும் நாட்டுடைமை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு!

**சென்னை, ஆக. 24-**

**“முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூல்கள் அனைத்தும் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமையாக்கப்படுகிறது” என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

தமிழ் வளர்ச்சித் துறையால் தமிழ்ச் சான்றோர்களின் நூல்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டு அவரவர் எழுதிய நூல்களின் எண்ணிக்கை, சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அவர்தம் மர புரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 179 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடை மையாக்கப்பட்டு அவர்தம் மரபுரிமையர் களுக்கு ரூபாய் 14.42 கோடி நூலுரிமைத் தொகை அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வரிசையில், சமூக நீதிக்காக அரும்பாடுபட்ட தலைவரும், ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடியவரும், தமி ழுக்கு செம்மொழித் தகுதியினைப் பெற் றுத் தந்தவரும், தனது எழுத்து மற்றும் பேச்சுக்களின் மூலம் உலகெங்கும் வாழும் தமிழர் நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்தவருமான முத்தமிழறிஞர்கலை ஞர் அவர்களின் அனைத்து நூல்களும் தமிழ்நாடு அரசு சார்பில் நூலுரிமைத் தொகை ஏதுமின்றி நாட்டுடைமையாக்கி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2024) ஆணை வழங்கியுள்ளார்.

### பல தலைமுறைகளின் எழுச்சிக்கான திறவுகோல்!

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சூன் 3, 1924 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளை கிராமத்தில் பிறந்து, தமது கடின உழைப் பாலும் அளப்பரிய திறமையாலும் தமிழ் வளத்தாலும், தமிழ்நாட்டில் ஒரு மாபெ ரும் ஆளுமையாக விளங்கியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் என்பது பெயர் மட்டுமல்ல; தமிழினத்தின் தன் னேரில்லாத தனி முகவரி! பல தலை முறைகளின் எழுச்சிக்கான திறவுகோல்!



5 முறை முதலமைச்சர், 13 முறை சட்ட மன்ற உறுப்பினர் என ஒரு தலைமுறை மாற்றத்திற்கு வித்திட்ட மகத்தான தலைவர்.

தமிழுணர்வு கொண்ட 14 வயது சிறு வனாகத் தம் இலக்கிய வாழ்வைத் தொடங்கி, 15ஆம் வயதில் “மாணவ நேசன்” என்ற கையெழுத்து ஏடு தொடங்கி, 18ஆம் வயதில் பேரறிஞர் அண்ணா அவர்களின், “திராவிட நாடு” இதழில் ‘இளமைப்பலி’ என்ற அவரது முதற்கட்டுரை வெளி யாகி பெரும் வரவேற்பைப் பெற் றது. தம்முடைய 20ஆவது வயதில், ‘திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்’ என் னும் இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பை உருவாக்கினார்.

### ‘முரசொலி’ நாளிதழ் இன்றும் முழங்குகிறது!

தமது 23ஆம் வயதில் ‘இரா ஜகுமாரி’ திரைப்படத் திற்கு முதன் முதலாக வசனம் எழுதி னார். முதன் முதலில் “முரசொலி” என்னும் துண்டு இதழ் வெளியீட்டை 1942ஆம் ஆண்டு வெளியிட்டு; பின்னர் 1946 முதல் 1948 வரை திங்களி தழாக மாற்றி; பின் மீண்டும் 1953இல் சென்னை யில் திங்களிதழா கத் தொடங்கி 1960ஆம் ஆண்டில் அதனை முழுமையான நாளி தழாக மாற்றினார். அந்த முரசொலி நாளிதழ் இன்றும் முழங்குகிறது.

அனார்கலி, உதய சூரியன், உன்னைத் தான் தம்பி, இளைஞன் குரல், ஒரே முத் தம், காகிதப்பூ, சாக்ரடீஸ், சாம்ராட் அசோ கன், சிலப்பதிகாரம் – நாடகக் காப்பியம், சேரன் செங்குட்டுவன், திருவாளர் தேசியம் பிள்ளை, தூக்குமேடை, நச்சுக் கோப்பை, நான்மணிமாலை, நானே அறிவாளி, புனித இராஜ்ஜியம், மணிமகுடம், மகான் பெற்ற மகன் (அம்மையப்பன்), மந்திரிகு மாரி உள்ளிட்ட பல்வேறு நாடகங்களை எழுதியுள்ளார்.

வெள்ளிக்கிழமை, சுருளிமலை, வான்கோழி, புதையல், ஒரே ரத்தம், ஒரு மரம் பூத்தது, அரும்பு, பெரிய இடத்துப் பெண், சாரப்பள்ளம் சாமுண்டி, நடுத் தெருநாராயணி ஆகிய புதினங்களையும்;


ரோமாபுரிப் பாண்டியன், பொன்னர் – சங்கர் அண்ணன்மார் வரலாறு, பாயும் புலி பண்டாரக வன்னியன், தென்பாண் டிச் சிங்கம், தாய் – காவியம் ஆகிய வர லாற்றுப் புதினங்களையும்;

சங்கிலிச் சாமியார், கிழவன் கனவு, பிள்ளையோ பிள்ளை, தப்பிவிட்டார்கள், தாய்மை, நாடும் நாடகமும், முடியாத தொடர்கதை, பதினாறு கதையினிலே, நளாயினி, பழக்கூடை, தேனலைகள், ஒருமரம் பூத்தது, மு.க.வின் சிறுகதைகள் உள்ளிட்ட சிறுகதைகளையும் எழுதி யுள்ளார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலங்களில் 108 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை செய்து, அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகையாக 7 கோடியே 76 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசு சார்பில் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார் என்பது பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்கவையாகும்.**

### கவிதைத் தொகுப்புகள்!

கவிதையல்ல, முத்தாரம் (சிறையில் எழுதிய கவி வசனங்கள் தொகுப்பு), அண்ணா கவிய ரங்கம், Pearls (Translation), கவியரங்கில் கலைஞர், கலை ஞரின் கவிதைகள், வாழ்வெ னும் பாதையில், கலைஞரின் திரை இசைப்பாடல்கள், கலை ஞரின் கவிதை மழை, காலப் பேழையும் கவிதைச் சாவியும் உள்ளிட்ட கவிதைத் தொகுப்பு களும் அவரது கவித்திற மையை வெளிப்படுத்துவன.



கலைஞரின் குறளோவியம் மிகவும் புகழ்பெற்ற நூல்; தேனலைகள், சங்கத் தமிழ், திருக்குறள் கலைஞர் உரை, தொல்காப்பியப் பூங்கா உள் ளிட்ட தமிழறிஞர்கள் போற் றும் உரை நூல்களையும் படைத்துள்ளார்.

உடன்பிறப்புகளுக்குக் கலைஞர் எழு திய கடிதங்கள் தொகுக்கப்பட்டு, 54 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. ‘நெஞ்சுக்கு நீதி’ என்னும் கலைஞர் அவர் களின் வாழ்க்கை வரலாற்று நூல் 6 தொகுதிகளாக வெளிவந்துள் ளன. 1957 முதல் 2018ஆம் ஆண்டுவரை கலைஞர் சட்ட மன்றத்தில் ஆற்றிய உரை கள் 12 தொகுதிகளாக வெளி வந்துள்ளன. தனியொரு மனிதரால் அவரது வாழ்நாள் காலத்தில் இத்தனை இலக்கி யப் படைப்புகளை வழங்க இயலுமா என வியப்புறும் வண்ணம் இலக்கிய உல கில் சாதனைகள் படைத்தவர் கலைஞர் அவர்கள்.

### எண்ணற்ற தலையங்கங்கள்!

எண்பதாண்டுகாலம் பொது வாழ்வு, ஐந்துமுறை முதலமைச்ச ராக மக்கள் பணி மட்டுமல்லாமல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 75 திரைப்படங் களுக்குக் கதை, திரைக்கதை வசனங் களையும், 15 புதினங்களையும், 20 நாட கங்களையும், 15 சிறுகதைகளையும், 210 கவிதைகளையும் படைத்துள்ளார் கள். இவற்றைத் தவிர, தாம் பணியாற்றிய இதழ்களில் எண்ணற்ற தலை யங்கங் களையும் தீட்டியுள்ளார்.

### பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தக்க கலைஞர் ஆணை!

மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சரா கப் பொறுப்பேற்ற காலங்களில் 108 தமி ழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை செய்து, அவர்தம் மரபுரிமையர்களுக்கு நூலுரிமைத் தொகையாக 7 கோடியே 76 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு அரசு சார் பில் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார் என்பது பொன்னெழுத்துகளால் பொறிக் கத்தக்கதாகும்.

இத்தகைய ஒப்பாரும் மிக்காரும் இல் லாத தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அனைத்து நூல் களும் நாட்டுடைமையாக்கம் செய்யப்பட் டுள்ளதால், தமிழ்நாட்டில் மட்டுமின்றி உலகெங்கும் வாழும் தமிழர்கள் முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் செழு மையான நூல்களை ஊன்றிப் படிக்க அரியதொரு வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிவிப்பில் கூறியுள்ளார்.

---

### 100 நாள் வேலைத் திட்டத்தில்

# கிராம மக்களுக்கு பிரதமர் மோடி துரோகம்!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஆக.24-*

*100 நாள் வேலை திட் டத்திற்கான நிதியை குறைத்து கிராமப்புற மக் களுக்கு பிரதமர் மோடி துரோகம் செய்துவிட்ட தாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சரமாரியாக குற்றம் சாட்டியுள்ளார்.*



*மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கான சட்டம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதி, காங்கிரஸ் தலைமை யிலான ஐக்கிய முற் போக்குக் கூட்டணி அரசு நிறைவேற்றியது.*

*இதையொட்டி, சமூக வலைதளத்தில் பதிவிட் டுள்ள காங்கிரஸ் தலை வர் மல்லிகார்ஜுன கார்கே, கிராமப்புற மக் களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நோக்கில் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு, நிதியை குறைத்து, வேலை நாட் களை நீக்கினாலும், 13.3 கோடி கிராம மக்களின் வாழ்வாதாரம் இன்ன மும் இத்திட்டத்தை சார்ந்தே இருப்பதை சுட் டிக்காட்டியுள்ளார்.*

*இத்திட்டத்தில் இருந்து 7 கோடி தொழி லாளர்கள் நீக்கப்பட்டுள் ளதையும் குறிப்பிட்டுள்ள கார்கே, நிதிநிலை அறிக் கையில் 100 நாள் வேலை திட்டத்திற்கு வெறும் 1.7 சதவிகிதம் மட்டுமே நிதி ஒதுக்கிய அவலத்தையும் எடுத்துரைத்துள்ளார். போதுமான நிதி ஒதுக் கப்படவில்லை என்று நாடாளுமன்ற நிலைக் குழு எச்சரித்துள்ளதை மேற்கோள்காட்டியுள்ள மல்லிகார்ஜுன கார்கே, கிராமப்புற மக்களுக்கு பிரதமர் மோடி செய் துள்ள துரோகத்தின், நினைவுச் சின்னமாக 100 நாள் வேலை திட் டத்தின் தற்போதைய நிலை இருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.*

